அரிசி மூட்டைகளில ஒரு அட்டையில இப்படி எழுதி வைக்கலாம். இதை வாங்குவதன் மூலம் என்னென்ன நன்மைகளைப் பெறுகிறார்கள். இதனை வாங்கிச் சாப்பிடுகின்றவர்கள் உடலுக்கு என்னென்ன நன்மைகள் என்று எழுதி வைப்பதோடு, தவிடு நீக்கப்படாத அரிசியை வாங்குகின்றவர்களுக்கு சப்சிடி கொடுக்கின்ற அளவுக்கு முன்வர வேண்டும்.

[6] அறிவிப்புகள்—தொடர்ச்சி.

ஆ. அவைக் குறிப்பிலிருந்து ஓர் அமைச்சரின் சில
கருத்துக்கள் நீக்கம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு—இன்று காலையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கொடுத்த உரிமைப் பிரச்சினை சம்பந்தமாக உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களில் ஒரு சில பகுதிகள் நீக்கப்பட வேண்டுமென்று கருதுகிற காரணத்தால் அது பற்றிப் பேரவையில் அறிவிப்புச் செய்கிற வரையில் அது குறித்து எந்தச் செய்தியும் வெளியிடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் செய்தி சட்டமன்றத்தில் பேசப்பட்டு பத்திரிகைகளுக்குச் சென்று ஏறத்தாழ அச்சாகிவிட்டது. அந்த விவாதம் நடந்து ஏறத்தாழ இரண்டு மணி நேரம் ஆகிவிட்ட நிலையில், ஏற்கனவே அச்சாகிவிட்ட நிலையில் இப்படிப்பட்ட கருத்து நாளைக்கு பத்திரிகையில் வெளிவருமானால் அது உரிமைப் பிரச்சினைக்கு உரியதாகாது என்பதை இப்போதே பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்—(ஆ) தொடர்ச்சி.

திரு. குமரி அனந்தன்: எனவே, அந்தத் தவிடு நீக்கப்படாத அரிசியை உண்பதால் இன்னின்ன நன்மைகள் ஏற்படும் என்று எழுதி வைப்பதோடு தவிடு நீக்கப்பட்ட அரிசிக்கும் நீக்கப்படாத அரிசிக்கும் விலையிலும் வேறுபாடு இருத்தல் வேண்டும். குறைந்த விலையில் கொஞ்சமாவது அதனைக் குறைத்துக் கொடுக்கிற நேரத்தில் அரசாங்கத்தில் எந்த விதமான வற்புறுத்தலும் இல்லாமல் அவர்கள் இதனை வாங்கும் நிலை ஏற்படலாம். அதோடுகூட நாம் எப்படி மில் துணிக்குக் கொடுக்காத சலுகைகளைக் கைத்தறிக்கு நீட்டிக் கொடுக்கிறோமோ அதைப்பால் இந்தக் கைக்குத்தல் அரிசிபோன்ற, ஆனால் தவிடு நீக்கப்